

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் ஆலங்குடி பேரூராட்சியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி கழக வெற்றி வேட்பாளர் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதனுக்கு இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தின் மூத்த தலைவர், முன்னாள் ஒன்றிய அமைச்சர், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் ப.சிதம்பரம் அவர்கள் வெற்றிச் சின்னமான உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் கேட்டு தேர்தல் பரப்புரையை மேற்கொண்டு "திராவிட மாடல்" அரசின் சாதனை நலத்திட்டங்களை எடுத்துக்கூறி பொதுமக்களிடையே வாக்குச் சேகரிப்பு பணியில் ஈடுபட்டார்.



கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வேட்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி காட்டூர் பகுதியில் பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் கழக சட்டத்துறை இணை செயலாளர் வழக்கறிஞர் கே.எம். தண்டபாணி, பகுதி கழக பொறுப்பாளர் விஜயகுமார் உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## குறிஞ்சிப்பாடி தொகுதி, நடுவீரப்பட்டு மந்தகரையில்

# தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் சிறப்புரை!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் அவர்கள் நாளை (20.04.2026-திங்கட்கிழமை) காலை 10.00 மணியளவில் குறிஞ்சிப்பாடி தொகுதி நடுவீரப்பட்டு மந்தகரையில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் சார்பில் குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களை, ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கும் வாக்கு கேட்டு பிரச்சாரத்தில் ஈடுபட உள்ளார். அதுசமயம் இப்பிரச்சார கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊராட்சி மற்றும் கிளை, வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக தொகுதி பார்வையாளர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், வார்டு, பூத் கழக இளைஞரணி மற்றும் மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜென்ட்கள்(BDA), ஸ்டாலினின் மகளிர் படையினர்கள், கழக தோழர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர் - கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.



சேலம் கிழக்கு மாவட்டம் ஏற்காடு சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் கழக வேட்பாளர் ரேவதி மாதேஸ்வரனை ஆதரித்து கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம்.பி., அயோத்தியா பட்டணம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சிகளில் கழக அரசின் சாதனைகளை சொல்லி பொதுமக்களிடம் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். அப்போது தே. மலையரசன் எம்.பி., ஒன்றிய செயலாளர் ஏ. விஜயகுமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாலு , முனைவர் அ.சீனிவாசன் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தருமபுரி சட்டமன்ற தொகுதி தே.மு.தி.க. வேட்பாளர் டாக்டர்.இளங்கோவன் சோகத்தூர்,வெண்ணாம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் தி.மு.க. தேர்தல் அறிக்கையை விளக்கி கூறி வாக்கு சேகரித்தார்.உடன் ஒன்றிய செயலாளர் டி.எல்.காவேரி,விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் ஹரிவிக்னேஷ்,இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் அசோக்குமார், வி.சி.க. மாவட்ட செயலாளர் பாண்டியன், தே.மு.தி.க. மாவட்ட செயலாளர் குமார், நகர செயலாளர் கேப்டன்.சுரேஷ்,மாணவர் அணி விக்னேஷ் மற்றும் கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.

## புத்துகோயில் 'முரசொலி' முகவர்

# எம். குமார் இல்லத் திருமண விழா!

## கழக நிர்வாகிகள் வாழ்த்து!





திருப்பத்தூர், ஏப்.19-

திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி வட்டம் புத்துக்கோயில் முரசொலி முகவர் எம். குமார்-விஜயலட்சுமி தம்பதியரின் மகள் கே. ரம்யா, பி.காம் திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை ஜங்ஷன் எஸ். தமிழ்ச்செல்வன் -சசிகலா தேவி ஆகியோரின் மகன் டி.லோகேஷ் இவர்களின் திருமணம் நாளை (20.4.2026-திங்கட்கிழமை) அன்று காலை வாணியம்பாடி ஜோலார்பேட்டை நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சசிபிரியா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இத்திருமண விழாவில் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

# மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் எம்.பி. தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்



## தலைமைக் கழக அறிவிப்பு

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 19.4.2026 | திருப்பூர் வடக்கு | அவினாசி |
| | கோவை மாநகர் | கோவை தெற்கு |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 16-04-2026.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.


# 13 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி!

மண்ணில் 13.12.1926



மனதில் 19.4.2013

# செ.குப்புசாமி Ex.M.P.,

தலைவர் – தொ.மு.ச.பேரவை

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்த நாள் இன்று!
ஆனது ஆண்டு பதிமூன்று!

மக்கள் அரசின் மாண்பு –
ஜனநாயகத்தின் விடியல்
இவைகளின் முன்மாதிரி "திராவிட மாடல்" வரலாற்றில் –
தொழிற்சங்க விதைகளாய் வாழ்ந்த வேர்முகம்
**செ.குப்புசாமி Ex.M.P.,**
அவர்களின் – நினைவு நாளில்
என்றும் தளபதியாரின் கொள்கை அணிவகுப்பில்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் – கழகத் தலைவர் தளபதி வழியில்

**ராஜா குப்புசாமி**
கழக தொழிலாளர் அணி துணைச் செயலாளர்

**சுடர்மணி ராஜா** B.B.A., L.L.B.,